களுக்கும் வித்தியாசமில்லாமல்—இங்கேயும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற காரணத்தால் அவர்களுடைய நிலையையும் உணர்ந்து அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி.மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்ற நிலை வருமானால் நிச்சயமாக இரண்டு பேரூராட்சிகளுக்கும்—அவை இரண்டுமே ஒன்றாகக் கருதப்பட்டு—இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு அரசினுடைய உதவியினால் கடந்த காலத்தில் கட்டிக்கொடுக்கப்பட்ட பலவீடுகள் முடிவடையாமலேயே இருப்பதுடன் பல இடங்களில் குடிபுக முடியாத அளவுக்கு சீர் கெட்டிருப்பதால் மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வேறு எந்த மாவட்டத்திலும்—கன்னியாகுமரி, மாவட்டத்தில் சொல்லப்படுவதுபோல்—இது போன்ற தகவல் இல்லை. சில மாவட்டங்களில் கால தாமதமாக வீடுகள் கட்டும் பணிகள் நடைபெறுவதாக அறியப்பட்டு அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் அந்தப் பணியை துரிதப்படுத்துகிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அண்மையில் அவை முடிந்துவிடும் என்றும் அறிக்கை வந்திருக்கிறது.

கரும்பின் விலை

*2119—திரு. பொ. முருகேசன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சில மாநிலங்களிலுள்ளது போல் கரும்பின் விலையை விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டு வெட்டுக் கூலி, லாரி வாடகை போன்ற ஏனைய செலவுகளை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும் முறையை அரசு அமுல்படுத்துமா ?

1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரும்புக்கு தற்போது கொடுக்கப்படும் விலை, கொடுக் கப்படும் போக்குவரத்து மான்யம் மற்றும் இதர மான்யங்களை கணக்கில் எடுத்துக்கொண்டால் இந்த கோரிக்கையை அமுல் படுத்துவதற்கான நிதி நிலை வாய்ப்பு தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளுக்கு இல்லை.

திரு. பொ. முருகேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விலையைப் பொறுத்த வரையிலே மற்ற மாநிலங்களைப் போலவே தமிழ்நாட்டில் கரும்பிலிருந்து கிடைக் கிற ரெக்கவரி 10.5 அளவுக்கும் கூடுதலாக இருந்தாலும்கூட, மற்ற மாநிலங்களிலே தரப்படும் விலையை விட கரும்புக்கு மிகக் குறைந்த விலையே கொடுக்கப்படுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றாலும் மத்திய அரசு கரும்புக்கு ரூ. 220 தான் விலையாக நிர்ணயித்திருக்கிறது. நம்முடைய மாநிலத் தைப் பொறுத்தவரையில் டன்னுக்கு ரூ. 30 கூடுதலாக நாம் கொடுக்கிறோம்.

9.40 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கரும்புக்கு டன்னுக்கு மத்திய அரசை விட மாநில அரசு 30 ரூபாய் அதிகமாகக் கொடுப்பதாக இங்கே அமைச்ச ரவர்கள் சொல்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்பு வது, ஒரு டன்னினுடைய கரும்பினுடைய உற்பத்திச் சர்க்கரை எவ்வளவு ஆகிறது? அதைக் கணக்கிட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறதா? கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவ ரவர்களே, கரும்புச் சத்து 8.5 சதவீதம் இருப்பதைக் கணக் கிட்டுத்தான் மத்திய சர்க்காரும், இதைப்போல விலையை நிர்ணயிக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும் நம்முடைய முதலமைச்சரவர்கள் மத்திய சர்க்கார் ஏற்கனவே 200 ரூபாய் ஒரு டன்னுக்கு என்று இருந்த பொழுது 250 ஆகத் தந்தார்கள். பிறகு மத்திய சர்க்கார் இப்பொழுது 220 ரூபாயாக ஆக்கிய பிறகும்கூட நாம் 30 ரூபாய் கூடுதலாகவே கரும்பு உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்குக் கொடுக்கின்றோம்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வெட்டுக்கூலி இல்லையென்றாலும், லாரி வாடகையாவது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரைகளை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தில் சர்க்கரை ஆலை—கரும்பு வெட்டுச் செலவு, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றை ஆலைகளே ஏற்றுக்கொள்வதாகத் தெரிகிறது. தமிழகத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளிலும் கரும்பு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவை தூரத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆலையே ஏற்கிறது. அதாவது வயலிலிருந்து ஆலைக்குள்ள நாற்பது கிலோ மீட்டருக்கு உட்பட்ட தூரத்திலிருந்து பெறக் கூடிய கரும்புக்கு மட்டும்தான் விவசாயிகளே வாகன வாடகையை ஏற்க வேண்டும். ஆலையிலிருந்து நாற்பது கிலோ மீட்டருக்கு அதிகம் உள்ள தூரத்திற்கு உண்டான போக்குவரத்துச் செலவினை ஆலையே தன் செலவில் மானியமாக ஏற்றுக் கொள்கிறது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த லாரி வாடகையைப் பொறுத்தமட்டில், மராட்டியத்தில் பூரா வாடகையையுமே ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்கிறது. தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்கிறார்கள் ; ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு விவசாயிகளே கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இந்த 250 ரூபாயிலே லாரி வாடகையைக் கொடுப்பதினால் விவசாயிகளுக்கு அந்த விலை குறையக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, மராட்டியம் போல தமிழகத்திலேயும் அந்த லாரி வாடகை முழுவதையுமே ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்வதற்கான முறையில் அரசு உரிய நடவடிக்கையை எடுத்து, விவசாயிகளுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, நாற்பது கிலோ மீட்டர் வரை விவசாயிகளே ஏற்கிறார்கள். அதற்கு மேலே இருந்தால்---நாற்பது கிலோ மீட்டருக்கு மேல் உள்ள தூரத்திற்குப் போக்குவரத்துச் செலவை ஆலையே ஏற்றுக் கொள்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புசாலை திட்டத்தின்கீழ் உள்ள சாலைகள்

* 3313—திரு. சி. கோவிந்தராஜன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புசாலை திட்டத்தின் கீழ் உள்ள சாலைகள் எத்தனை?